போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE,

MAY 9, 1922.

ந. 8 (3).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1922-ம்௵ மே௴ 9௳. [விலை, 6 பை.

இந்தியக் கவர்ன்மெண்ட் மசோதா ஆக்ட்.

BILL OF THE GOVERNMENT OF INDIA.

இராஜாங்க சபையிலும் சட்டநிரூபண சங்கத்திலும் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டுகளும், ஷை சபைகளும் சங்கத்துக்கும் அனுப்பப்பட்ட ஸெலெக்ட் கம்மிட்டியாரின் ரிபோர்ட்டுகளும், இந்திய சட்டநிரூபண விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி பிரசுரிக்கப்பட்ட மசோதா ஆக்டுகளும்.

இந்தியா கவர்ன்மெண்ட்.

சட்டநிரூபண இலாகா.

அடியிற்கண்ட மசோதா ஆக்டானது - 1922-ம்௵ மார்ச்௴ 25௳ சட்டநிரூபண சங்கத்தில் கொண்டுவரப்பட்டது :—

No. 16 of 1922.

1922-ம்௵த்து 16-வது நெ.

A BILL FURTHER TO AMEND THE CRIMINAL TRIBES ACT, 1911.

குற்றத்தொழில் ஜாதியாரைப்பற்றிய 1911-ம்௵த்து ஆக்டைப் பின்னும் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்.

1911-ம்௵த்து 3-வது ஆக்ட். குற்றத்தொழில் ஜாதியாரைப்பற்றிய 1911-ம்௵த்து ஆக்டைப் பின்னும் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியால், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

சுருக்கமான பெயர். 1. இந்த ஆக்டை, குற்றத்தொழில் ஜாதியாரைப்பற்றிய 192 -ம்௵த்து (திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

1911-ம்௵த்து 3-வது ஆக்ட். 1911-ம்௵த்து 3-வது ஆக்ட் 2-வது பிரிவில் திருத்தம். 2. (இதில் பின்னால் ஷை ஆக்ட் என்று குறிப்பிடப்படும்) குற்றத்தொழில் ஜாதியாரைப்பற்றிய 1911-ம்௵த்து ஆக்ட் 2-வது பிரிவில்,—

(a) (1) குறிப்பிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட பகுதிகளை அமைத்துக் கொள்ளவேண்டும் ; அவையாவன :—

“ (1A) ‘டிஸ்ட்ரிக்ட்’ என்பதில் யாதொரு ராஜதானிப்பட்டணம் என்பதும் ரங்கூன் பட்டணம் என்பதும் அடங்கும் ;

(1B) 'டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்' என்பது - யாதொரு ராஜதானிப்பட்டணத்தின் விஷயத்திலாவது ரங்கூன் பட்டணத்தின் விஷயத்திலாவது பொலீஸ் கம்மிஷனர் என்று அர்த்தமாகும்;" மேலும்,

(b) (2) குறிப்பிட்ட பகுதிக்குப் பிறகு அடியிற்கண்ட பகுதியை அமைத்துக் கொள்ளவேண்டும்; அதாவது:—

"(2A) 'பொலீஸ் ஸூபரின்டெண்டென்ட்' என்பது - யாதொரு ராஜதானிப் பட்டணத்தின் விஷயத்திலாவது ரங்கூன் பட்டணத்தின் விஷயத்திலாவது, இந்த ஆக்டின்படி பொலீஸ் ஸூபரின்டெண்டென்டின் அலுவல்களைச் செய்ய பிரதேச கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தரென்று அர்த்தமாகும்."

1911-ம் வருஷத்து 3-வது ஆக்ட் 4-வது பிரிவில் திருத்தம்.

3. ஷை ஆக்ட் 4-வது பிரிவில், "ஜாதியைச் சேர்ந்தவர்களையாவது அவர்களில் எந்தப் பகுதியாரையாவது" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "ஜாதியைச் சேர்ந்தவர்களை" என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1911-ம் வருஷத்து 3-வது ஆக்ட் 5-வது பிரிவில் திருத்தம்.

4. ஷை ஆக்ட் 5-வது பிரிவிலே,—

(a) [இந்தப் பகுதியில் கண்ட திருத்தம் தமிழ் மொழிபெயர்ப்பில் அவசியமில்லை];

(b) "சகலர்களுமாவது ரெஜிஸ்டாராக வேண்டுமென்று கட்டளையிடப்படுகிற அந்த ஜாதியைச் சேர்ந்த ஒரு பகுதியாராவது" என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக "சகலர்களும்" என்னும் வார்த்தையை அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும்,

(c) விலக்கு நிபந்தனையில், "அல்லது அதன் யாதொரு பகுதியை" என்னும் வார்த்தைகளை விட்டுவிட்டு, "செய்யலாம்" என்னும் வார்த்தைக்குப்பிறகு "மேலும், அந்தப்படி எவரையாவது நிவாரணை செய்திருந்தால் அதை ரத்து பண்ணலாம்." என்னும் வார்த்தைகளைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

1911-ம் வருஷத்து 3-வது ஆக்ட் 13-வது பிரிவில் திருத்தம்,

5. ஷை ஆக்ட் 13-வது பிரிவில், "மாற்றலாம்" என்னும் வார்த்தைக்குப் பிறகு அடியிற்கண்டதைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

"மேலும், இதுவிஷயமாய்ப் பிரதேச கவர்ன்மென்டாரால் அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் யாதொரு உத்தியோகஸ்தர் - எழுத்துமூலமான உத்தரவைக்கொண்டு, அதே டிஸ்ட்ரிக்டைச் சேர்ந்த வேறொரு விஸ்தீர்ணத்தில் அந்தக் குற்றத்தொழில் ஜாதியார் நடமாடும்படி நிர்ப்பந்தம் ஏற்படுத்தியோ அல்லது சந்தர்ப்பத்துக்கேற்றபடி வேறொரு இடத்தில் தங்கியிருக்கும்படியோ கட்டளையிட்டு அப்படிப்பட்ட யாதொரு விளம்பரத்தை மாற்றலாம்."

1911-ம் வருஷத்து 3-வது ஆக்டில் புதிய 13A பிரிவை அமைத்துக்கொள்வது.

6. ஷை ஆக்ட் 13-வது பிரிவுக்குப் பிறகு, அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

வேறொரு மாகாணத்தில் குற்றத்தொழில் ஜாதியாரின் நடமாட்டங்களைக் குறித்து நிர்ப்பந்தம் ஏற்படுத்தவாவது அங்கே அவர்களைத் தங்கியிருக்கும்படி செய்யவாவது பிரதேச கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்.

"13A. 11-வது பிரிவின்படியாவது 13-வது பிரிவின்படியாவது பிரதேச கவர்ன்மென்டாரால் செய்யப்படும் யாதொரு விளம்பரத்தில், வேறே எந்த மாகாணத்திலாவது இருக்கும் யாதொரு விஸ்தீர்ணம் அல்லது இடத்தைக் குறிப்பிட்டு, அந்த விஸ்தீர்ணத்தில் மாத்திரமே குற்றத்தொழில் ஜாதியார் நடமாட வேண்டுமென்று நிர்ப்பந்தம் ஏற்படுத்தலாம், அல்லது அந்த இடத்தில் அவர்களைத் தங்கியிருக்கும்படிச் செய்யவேண்டுமென்று காணலாம்; ஆனால், அந்த மாகாணத்துப் பிரதேச கவர்ன்மென்டாரின் சம்மதத்தை முன்னதாய்ப் பெற்றிருக்கவேண்டும்."

1911-ம் வருஷத்து 3 வது ஆக்ட் 15-வது பிரிவுக்கு பர்த்தியாகப் புதிய பிரிவை அமைத்துக்கொள்வது.

7. ஷை ஆக்ட் 15-வது பிரிவுக்கு பர்த்தியாக அடியிற்கண்ட பிரிவை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது:—

குற்றத்தொழில் ஜாதியார் ஒரு மாகாணம் அல்லது டிஸ்ட்ரிக்டிலிருந்து வேறொரு மாகாணம் அல்லது டிஸ்ட்ரிக்டுக்கு அனுப்பப்படும்பொழுது ஆக்டைப் பிரயோகிப்பது.

"15. (1) எந்த மாகாணத்தின் பிரதேச கவர்ன்மென்டாரால் யாதொரு குற்றத்தொழில் ஜாதியாருக்கு சம்பந்தமாய் 3-வது பிரிவின்படிக்கான விளம்பரம் பிறப்பிக்கப்பட்டதோ அந்த மாகாணமல்லாத வேறே மாகாணத்திலுள்ள யாதொரு விஸ்தீர்ணத்தில் ஷை குற்றதொழில் ஜாதியாரின் நடமாட்டங்களைக்குறித்து நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டாவது அவர்கள் அந்த மாகாணத்திலிருக்கும் ஒரு வாசஸ்தலத்தில் தங்கியிருக்கும்படி செய்யப்பட்டாவதிருக்கிறபட்சத்திலே, இந்த ஆக்டிலும் அதன்படி செய்யப்பட்ட விதிகளிலும் கண்டிருக்கும் சகல நிபந்தனைகளும் - ஷை விளம்பரமானது அப்படிப்பட்ட வேறே மாகாணத்தின் பிரதேச கவர்னமென்டாரால் பிறப்பிக்கப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே ஷை குற்றத்தொழில் ஜாதியாருக்குப் பிரயோகப்படும்.

(2) யாதொரு குற்றத்தொழில் ஜாதியார் 4-வது பிரிவின்படி யாதொரு டிஸ்ட்ரிக்டில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்து, (அதே மாகாணத்திலிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி) வேறொரு டிஸட்ரிக்டிலுள்ள ஒரு விஸ்தீர்ணத்தில் அவர்களுடைய நடமாட்டங்களைக்குறித்து நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டாவது அதிலுள்ள ஒரு வாசஸ்தலத்தில் அவர்கள் தங்கியிருக்கும்படி செய்யப்பட்டாவதிருக்கும்பட்சத்தில், ரெஜிஸ்டரையாகிலும் அதிலுள்ள சம்பந்தப்பட்ட யாதொரு பதிவு அல்லது பதிவுகளையாகிலும் பின்னே சொல்லப்பட்ட டிஸ்ட்ரிக்டின் பொலீஸ் ஸூபரின்டெண்டென்டுக்கு அனுப்பிவிடவேண்டும்; மேலும், இந்த ஆக்டிலும் இதன்படி செய்யப்பட்ட விதிகளிலும் கண்ட சகல நிபந்தனைகளும் - ஷை குற்றத்தொழில் ஜாதியார் அந்த டிஸ்ட்ரிக்டில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே பிரயோகப்படும்; அல்லாமலும், அந்த டிஸ்ட்ரிக்டின் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர் 5-வது பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு நிவாரணையை ரத்துசெய்ய அதிகாரமுடையவருமாவார்.''

1911-ம் ௵த்து 3-வது ஆக்ட் 16-வது பிரிவில் திருத்தம்.

8. ஷை ஆக்ட் 16-வது பிரிவில், "அல்லது அந்த ஜாதியாரில் எந்தப் பகுதியார் விஷயமாக" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

1911-ம் ௵த்து 3-வது ஆக்ட் 18-வது பிரிவில் திருத்தம்.

9. ஷை ஆக்ட் 18-வது பிரிவிலே,—

(a) "பிரதேச கவர்ன்மெண்டார்" என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு, "அல்லது இதுவிஷயமாய் அவர்களால் அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் யாதொரு உத்தியோகஸ்தர்" என்னும் வார்த்தைகளையும் "தங்களுடைய" என்னும் வார்த்தைக்குப் பிறகு "அல்லது தம்முடைய" என்னும் வார்த்தைகளையும் அமைத்துக்கொள்ளவேண்டும்; மேலும்,

(b) (b) குறிப்பிட்ட பகுதியில் "அதே மாதிரியான" என்னும் வார்த்தைகளை விட்டுவிடவேண்டும்.

1911-ம் ௵த்து 3-வது ஆக்ட் 22 வது பிரிவில் திருத்தம்.

10. 22-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவில், "மீறிநடந்தால" என்னும் வார்த்தைக்குப் பிறகு, "அவன் வாரண்டில்லாமலே பிடிக்கப்படலாம்; மேலும்," என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

1911-ம் ௵த்து 3-வது ஆக்டில் புதிய 27A, 27B, பிரிவுகளை அமைத்துக்கொள்வது.

11. ஷை ஆக்ட் 27-வது பிரிவுக்குப் பிறகு அடியிற்கண்ட பிரிவுகளை, "சேர்க்கையான விதிகள்" என்னும் தலைப்பின்கீழ் அமைத்துக்கொள்ளவேண்டும்; அவையாவன:—

சில குற்றத்தொழில் ஜாதியார்களை இந்தியாவிலுள்ள சமஸ்தானங்களுக்கு அனுப்புவதற்கான அதிகாரம்.

"27-A. 3-வது பிரிவில் சொல்லப்பட்டிருப்பவர்களைப்போன்ற நபர்களின் நடமாட்டங்களைக்குறித்து நிர்ப்பந்தம் ஏற்படுத்தவாவது அவர்களை ஒரு வாசஸ்தலத்தில் தங்கியிருக்கும்படிச் செய்யவாவது இந்தியாவிலுள்ள யாதொரு சமஸ்தானத்தின் சட்டத்தினால் போதுமான அளவுக்கு நிபந்தனை ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்று பிரதேச கவர்ன்மெண்டார் தெரிந்து திருப்தியடைந்தால், அவர்கள் - அந்த சமஸ்தானத்தின் மன்னர் அல்லது அதிபதியின் சம்மதத்தைப்பெற்று அந்தந்த காலத்தில் (தங்களுடைய) மாகாணத்திலிருக்கும் யாதொரு குற்றத்தொழில் ஜாதியாரை அந்த சமஸ்தானத்துக்கு அனுப்பும்படி கட்டளையிடலாம்; மேலும், அவர்கள் அந்தப்படி அனுப்புவதற்கு அவசியமான சகல ஏற்பாடுகளையும் செய்ய அதிகாரம் கொடுக்கலாம்.

குற்றத்தொழில் ஜாதியாரைப்பற்றி சொல்லியிருப்பவை சில விஷயங்களில் அதன் ஒரு பகுதியைச் சேர்ந்தவர்களைப்பற்றியும் சொல்லியிருப்பவைகளாகக் கொள்ளவேண்டுமென்பது

27B. 4, 5, 11, 13, 14, 15, 16, 17, 27A பிரிவுகளில் யாதொரு குற்றத்தொழில் ஜாதியாரைப்பற்றி சொல்லியிருப்பவை யாதொரு குற்றத்தொழில் ஜாதியாரைப்பற்றியாவது அதன் யாதொரு பகுதியைச் சேர்ந்தவர்களைப்பற்றியாவது சொல்லியிருப்பவைகளாக எண்ணப்படும்.''

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

(1911-ம் ௵த்து 3-வது ஆக்டாகிய) குற்றத்தொழில் ஜாதியாரைப்பற்றிய 1911-ம் ௵த்து ஆக்டின்படி இனிமேல் பரிபாலனம் நடத்துவதைக்குறித்து ஆலோசிப்பதற்காக, ப்ரிடிஷ் இந்தியாவிலுள்ள மாகாணங்களின் பிரதிநிதிகளும் இந்திய சமஸ்தானங்களின் பிரதிநிதிகளும் சேர்ந்து 1919-ம்வருஷம் டிஸெம்பர் மாதத்தில் டெல்லியிலே ஒரு மகாசபை கூடினார்கள். அந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளை நுட்பமாய்ப் பரிசீலனை செய்து அனேக

திருத்தங்கள் செய்யவேண்டுமென்று மேற்படி சபையார் சிபாரிசு செய்தார்கள். இந்தப்படி சிபாரிசு செய்யப்பட்ட விஷயங்கள் இந்தியா கவர்ன்மெண்டாரால் பரிசீலனை செய்யப்பட்டு, அவர்களால் பிரேரேபிக்கப்பட்ட திருத்தங்கள் பிரதேச கவர்ன்மெண்டுகளுக்கு அபிப்பிராயத்துக்காக அனுப்பப்பட்டன. பிரதேச கவர்ன்மெண்டுகளின் அபிப்பிராயங்களை அனுசரித்து மேற்படி திருத்தங்களை மறுபடியும் இந்தியா கவர்ன்மெண்டார் இப்போது பரிசீலனை செய்திருக்கிறார்கள். அந்தப்படி பரிசீலனைசெய்ததனால் ஏற்பட்ட முடிவான தீர்மானங்களை இந்த மசோதா ஆக்டில் சேர்த்திருக்கிறது.

2. ஷை திருத்தங்களில் பல வெறும் கிரமாசாரத்தைப் பற்றியவைகளாகவோ அல்லது மேற்படி ஆக்டை அமுலுக்குக் கொண்டுவருகையில் அனுபவத்திற்குத் தோன்றிய சில்லறைக் குறைகளை நிவர்த்திசெய்ய உத்தேசிக்கப்பட்டவைகளாகவோ இருக்கின்றன. இவைகளை விவரமாய் விளக்கிக் காட்டுவது அனாவசியமாகும். சேர்க்க உத்தேசித்திருக்கும் முக்கியாம்சமான மாறுதல்களைப்பற்றி அடியிற்கண்ட பாராக்களில் தனித்தனியே சொல்லியிருக்கிறது.

3. **மசோதா ஆக்டின் 2-வது பகுதி.**—பிரஸ்தாப ஆக்ட் ராஜதானிப்பட்டணங்களுக்கும் ரங்கூனுக்கும்கூட பிரயோகப்படச் செய்வதே இந்தப் பகுதியின் நோக்கமாகும். இந்தத் திருத்தம் செய்யவேண்டியது அவசியமென்று 1914-ம் ௵த்திலேயே வங்காள கவர்ன்மெண்டார் வற்புறுத்திச்சொன்னார்கள். யாதொரு ராஜதானிப் பட்டணத்தில வாசஞ்செய்யும் குற்றத்தொழில் ஜாதியார்களை ரெஜிஸ்டர் செய்வதற்கான சாதனம் எதுவும் ஷை ஆக்டில் ஏற்படுத்தப்பட்டில்லையென்று அவர்கள் அப்போது குறைகூறினார்கள். மேலும், பிரஸ்தாப பிரேரேபணையை சம்பந்தப்பட்ட இதர பிரதேச கவர்ன்மெண்டுகளும் பலமாய் ஆதரிக்கின்றன.

4. **மசோதா ஆக்டின் 5-வது பகுதி.**—இப்போதிருக்கிறபடி ஆக்டின் 13-வது பிரிவின் பிரகாரம், 11-வது பிரிவின்படிக்கான விளம்பரத்தின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட ஒரு விஸ்தீர்ணத்தில் யாதொரு குற்றத்தொழில் ஜாதியார் அல்லது அவர்களில் ஒரு பகுதியாருடைய நடமாட்டங்களைக்குறித்து நிர்ப்பந்தம் ஏற்படுத்தியிருந்தாலும் அல்லது அவர்கள் தங்கியிருக்கும்படிச் செய்திருந்தாலும், அவர்களை வேறொரு விஸ்தீர்ணத்துக்குக் கொண்டு போவதற்குமுன் பிரதேச கவர்ன்மெண்டாருடைய உத்தரவு பெறவேண்டியிருக்கிறது. இதனால், இந்த ஆக்டின்படி பரிபாலனம்செய்யவேண்டியிருக்கிறவர்களுக்கும், தம்முடைய சுற்றத்தாரைக் காணும் எண்ணத்துடனே தங்களுக்கு நல்ல வேலை கிடைக்கும்படி செய்துகொள்ளும் எண்ணத்துடனே அடிக்கடி வேறு இடங்களுக்குப் போக விரும்புகிற குற்றத்தொழில் ஜாதியைச் சேர்ந்தவர்களுக்குங்கூட அசௌகரியம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒரே டிஸ்ட்ரிக்டில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு குற்றத்தொழில் ஜாதியாரை அல்லது அதைச் சேர்ந்தவர்களை அனுப்ப பிரதேச அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், 5-வது பகுதியை (இந்த மசோதா ஆக்டின் 11-வது பகுதியினால் சேர்த்துக்கொள்ள பிரேரேபித்திருக்கும் புதிய 27-B பிரிவோடு சேர்த்து வாசித்து) அதைக்கொண்டு இந்த ஆலோசனையை நிறைவேற்றுவது உத்தேசமாகும்.

5. **மசோதா ஆக்டின் 6-வது பகுதி.**—ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்துக்கு குற்றத்தொழில் ஜாதியரை அனுப்புவதற்காக நிபந்தனை ஏற்படுத்துவதே இந்தப் பகுதியின் நோக்கமாகும். அப்படிப்பட்ட அதிகாரம் எந்தெந்த விஷயங்களில் இருப்பது உசிதமாயிருக்கிறதென்றால் :—

(a) யாதொரு குற்றத்தொழில் ஜாதியார் வாஸ்தவத்தில் எந்த மாகாணத்தைச் சேர்ந்தவர்களோ அந்த மாகாணத்திலிருந்து, யாதொரு பிரதேச கவர்ன்மெண்டாரின் அதிகார வரம்புக்குள் திரிந்துகொண்டிருந்து, அந்த ஜாதியாரின் விஷயமாய் அறிக்கையிடுவது அவசியமென்று ஷை கவர்ன்மெண்டாருக்குத் தோற்றுகிற விஷயங்கள் ;

(b) எந்த மாகாணத்தில் யாதொரு குற்றத்தொழில் ஜாதியார் விஷயமாய் அறிக்கையிடப்பட்டிருக்கிறதோ அந்த மாகாணமல்லாத வேறே யாதொரு மாகாணத்தில் அந்த ஜாதியாருக்கு வேலை கிடைக்கும் விஷயங்கள். எந்த மாகாணத்துக்கு ஷை ஜாதியார் அனுப்பப்படப்போகிறார்களோ அந்த மாகாணத்தின் பிரதேச கவர்ன்மெண்டாருடைய சம்மதத்துடனன்றி மற்றப்படி இந்த அதிகாரத்தைச் செலுத்தக்கூடாதென்று இந்தப் பகுதியில் நிபந்தனை கண்டிருக்கிறது.

6. **மசோதா ஆக்டின் 7-வது பகுதி.**—6-வது பகுதியினால் கொடுக்க உத்தேசித்திருக்கும் அதிகாரத்தைக்கொண்டு வேறொரு மாகாணத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிற குற்றத்தொழில் ஜாதியாருக்கு இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகள் பிரயோகப்படவேண்டுமென்று நிபந்தனை ஏற்படுத்துவதே இந்தப் பகுதியின் முக்கிய நோக்கமாகும்.

7. **மசோதா ஆக்டின் 9-வது பகுதியைச் சேர்ந்த (a) குறிப்பிட்ட உட்பகுதி.**—5-வது பகுதியில் நிபந்தனை கண்டிருப்பதைப்போலவே அதிகாரத்தைப் பிரித்துக் கொடுக்கும்படி செய்வது இந்தப் பகுதியின் உத்தேசமாகும். ஆக்டின் 18-வது பிரிவின்படி நடவடிக்கை நடத்த உத்தேசிக்கப்படுகிற யாதொரு விஷயத்தைப் பிரதேச கவர்ன்மெண்டாரின் அபிப்பிராயத்

துக்கு அனுப்புவது அவசியமாயிருக்கிறபடியால், அதிக அசௌகரியம் உண்டாகிறது. மேற்படி பிரிவின்படிக்கான அதிகாரங்களைப் பிரதேச அதிகாரிகளுக்குப் பிரித்துக் கொடுப்பதற்காக நிபந்தனை ஏற்படுத்தியிருக்கிறது.

8. **மசோதா ஆக்டின் 10-வது பகுதி.**—குற்றத்தொழில் ஜாதியாரைச் சேர்ந்தவர்கள் ஆக்டின் 22-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி தண்டனை விதிக்கத் தக்க குற்றங்கள் செய்தால், அவர்களை வாரன்டில்லாமலே பிடிக்க அதிகாரம் கொடுப்பது இந்தப் பகுதியின் நோக்கமாகும். இம்மாதிரி அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று மேற்படி சபையார் சிபாரிசு செய்திருந்தார்கள், அந்த ஆலோசனையைப் பிரதேச கவர்ன்மென்டுகளும் ஒப்புக்கொண்டன.

9. **மசோதா ஆக்டின் 11-வது பகுதி.**—27 A, 27 B என்னும் இரண்டு புதிய பிரிவுகளை ஆக்டில் சேர்ப்பதே இந்தப் பகுதியின் உத்தேசமாகும். பிரேரேபிக்கப்பட்டிருக்கும் புதிய 27 B பிரிவானது கிரமாசாரத்தைப்பற்றியது. "குற்றத்தொழில் ஜாதியார்" என்பதில் அதன் யாதொரு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதும் அடங்கும் என்று மேற்படி பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறது. பிரேரேபிக்கப்பட்ட புதிய 27 A பிரிவின் நோக்கம் என்னவென்றால், ப்ரிடிஷ் இந்தியாவிலிருந்து இந்திய சுதேச சமஸ்தானங்களுக்குக் குற்றத்தொழில் ஜாதியாரை அனுப்புவதற்காக நிபந்தனை ஏற்படுத்துவதேயாகும். ஷை ஜாதியாரை ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்துக்கு அனுப்புவதற்காக நிபந்தனை காணவேண்டுமென்று எந்தக் காரணங்களைக்கொண்டு பிரேரேபிக்கப்படுகிறதோ அந்தக் காரணங்களைக் கொண்டே, ப்ரிடிஷ் இந்தியாவிலிருந்து இந்திய சுதேச சமஸ்தானங்களுக்கும் ஷை சமஸ்தானங்களிலிருந்து ப்ரிடிஷ் இந்தியாவுக்கும் அனுப்புவதற்காகக் கூட நிபந்தனையிருப்பது உசிதமென்று எண்ணப்படுகிறது. பிரஸ்தாப ஆக்டானது இந்திய சட்டநிரூபண சபையாரால் செய்யப்பட்ட சட்டமாகையால் அதைக்கொண்டு ஷை ஜாதியாரை ப்ரிஷ்டி இந்தியாவிலிருந்து அனுப்புவது விஷயமாக மாத்திரமே நிபந்தனை ஏற்படுத்தலாம். பிரேரேபித்திருக்கும் புதிய பிரிவானது உருவத்தை கவனிக்கும்போது அனுமதி கொடுக்கக்கூடியபடி ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்பதும், எந்த சுதேச சமஸ்தானங்களில் குற்றத்தொழில் ஜாதியார் விஷயமாய் நிர்ப்பந்தம் ஏற்படுத்துவது சம்பந்தமாகவோ அவர்களை ஓரிடத்தில் தங்கியிருக்கும்படி செய்வது சம்பந்தமாகவோ போதுமான ஏற்பாடு செய்திருக்கிறதென்று பிரதேச கவர்ன்மென்டார் தெரிந்திருப்பியடைகிறார்களோ அந்த சமஸ்தானங்களுக்கு மாத்திரமே அனுப்ப ஷை பிரிவில் அனுமதி கொடுத்திருக்கிறதென்பதும் தெரியவரும்.

1922-ம் வருஷம் மார்ச்மீ 11உ.

டபில்யு. எச். வின்ஸென்ட்.

எச். மான்க்ரீப் ஸ்மித்,
இந்தியா கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.